**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 349/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W1 |
| Name | : | சபரிநாதன் |
| Father's /Husband Name | : | நடேசன் |
| Village | : | மணக்கால் அய்யம்பேட்டை |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 35 |
| Occupation | : | ஹோட்டல் ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 14th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து தற்போது சென்னையில் வசித்தும் சென்னையிலுள்ள கோகுலம் உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2023ம் ஆண்டு தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் இரவு சுமார் 11.00 மணியலவில் கரண்ட் இல்லாமல் இருந்தது. நான் திருவாரூரில் எனது பணியை முடித்துவிட்டு மணக்காலில் உள்ள எனது வீட்டிற்கு எனது இருசக்கர வாகனத்தில் இரவு சுமார் 11.00 மணியளவில் வடகண்டத்தில் உள்ள வெற்றாற்று பாலம் அருகே வந்து கொண்டிருந்த போது ஒரு நபர் என்னிடம் லிப்ட் கேட்டார். நான் வண்டியை நிறுத்தினேன். அப்போது அந்தநபர் ஒரு கத்தியை காட்டி என்னிடம் பணம் கொடு இல்லையென்றால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார். நான் பயந்து கொண்டு என்னிடமிருந்த ரூ600/- பணத்தை கொடுத்துவிட்டேன். அந்த நபர் Central University வழியாக ஓடிவிட்டார். நான் மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு பகுதி ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு**

**தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசாரிடம் கொடுத்த புகார் மனுவில் எதிரியின் பெயரை குறிப்பிட்டு புகார் மனு கொடுத்தேன் என்றால் என்னுடன் வந்த நபர் தான் புகார் மனுவை எழுதினார். நான் கையொப்பம்செய்தேன். புகார் மனுவில் எதிரியின் பெயரை குறிப்பிட்டுவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்தினால் எதிரியை தெரியாது என்றும் நான் புகார் மனுவை எழுதவில்லை என்றும், பொய்சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

சம்பவம் நடந்த இடம் இருட்டாக இருந்தது என்றாலும் என்ன நடந்தது எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை** :- இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.14 17:24:19 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.